
தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

மலர்—5 திருவள்ளுவராண்டு— 2017 ஆவணி 29 14—9—1986 இதழ்—6

## உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி வருகை

சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி திரு எம்.என். சந்த்ருகார் அவர்கள் 4-9-'86 அன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்தார்கள். தஞ்சை மாவட்ட நீதிபதி திரு' ஆர்.இராசகோபாலன் அவர்களும், சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் திரு என்.சனார்த்தனன் அவர்களும் உடன் வருகை புரிந்தனர்.



தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பொறி மையம், நூலகம், அருங்காட்சியகம் ஆகியவற்றைப் பார்வையிட்ட தலைமை நீதிபதி அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தற்போது நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகள் பற்றியும் ஆர்வமுடன் கேட்டறிந்தார்கள்.

## முனைவர் டி.பி.பட்நாயக் சொற்பொழிவு

இந்தியப் பல்கலைக் கழக நல்கைக் குழு உறுப்பினரும் இந்திய மொழிகளின் மைய நிறுவன (மைசூர்) இயக்குநருமாகிய முனைவர் டி.பி.பட்நாயக் அவர்கள் 9-9-'86 மாலை தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகக் கருத்தரங்குக் கூடத்தில் 'மொழியியல்' பற்றி ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மொழியியல் துறைத் தலைவர் முனைவர் கி.அரங்கன் தலைமை தாங்கி இயக்குநரை அறிமுகம் செய்தார். முனைவர் எசு. ஆரோக்கிய நாதன் நன்றி கூறினார்.

## தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்ப்பட்டியற் பரிந்துரை ஐவர் குழு-மூவர் தேர்வு

துணைவேந்தர் பணியமர்த்தற்கென மூவர் பெயர் கொண்ட பட்டியலைப் பரிந்துரை செய்யும் ஐவர் குழுவில் ஆட்சிக்குழுவின் சார்பில் இடம்பெற இருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக 1-9-'86ஆம் நாளன்று முற்பகல் 10-00 மணி முதல் 11-00 மணி வரை நடைபெற்ற தேர்தலில் கீழ்க்கண்ட இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என இதன் வழி சாற்றப்படுகிறது.

1. மறைத்திரு.வி.மி.ஞானப்பிரகாசம் சேச,
   எம்.ஏ.,பி.எச்.டி.,
   தூய சவேரியார் கல்லூரி,
   பாளையங்கோட்டை,
   திருநெல்வேலி.

2. டாக்டர் வி.வரதராசன்,எம்.எஸ்.,
   வி.வி.ஆர்.நர்சிங்ஹோம்,
   அருளானந்த நகர்,
   தஞ்சாவூர்.

இவ்வைவர் குழுவிற்குப் பேரவையின் சார்பில் இடம் பெறும் ஒருவராக –

முனைவர் அறவாணன் எம்.ஏ.,பி.எச்.டி.,
லயோலா கல்லூரி,
சென்னை

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## வள்ளுவர் வழங்கிய சொல்

காய் முற்றிக் கனிந்தால் கனி. காய்ப் பருவத்திற்கு முந்தியது பிஞ்சு எனப்படுகின்றது. திருவள்ளுவர் இதனைக் "கருக்காய்" என்றார்.

"தனியும் புலவியும் இல்லாயின், காமம்
கனியும் கருக்காயும் அற்று" –என்பது குறள்(1306)

கருப்பிடித்து, ஆனால் 'கரு முற்றாத காய்' என்னும் பொருளில் இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல்லை முதன்முதலாகத் திருக்குறளில் காண்கின்றோம். காலப்போக்கில் கருப்பிடித்து, முற்றாமல் சாவியான நெல்பதர்க்கு இச்சொல் வழங்கப்படுவதாயிற்று.


–கோவை.இளஞ்சேரன்.

## கல்வியில் நாடக முன்னோடித் திட்டம்

"வாழ்க்கையே ஒரு நாடகம்தான். இதனால்தான் வாழ்க்கையை ஒரு கவிதையுடனோ, இசையுடனோ ஒப்பிட்டுச் சொல்லாமல் நாடகத்துடன் இணைத்துச் சொல்கிறார்கள். இத்திட்டத்தை ஏற்று நடத்தும் ஆசிரியர்கள் உங்களுக்கு நாடகத்தைக் கற்றுக் கொடுக்க வருகின்றனர் என்று சொல்வதை விடவும் உங்களிடம் கற்றுக்கொள்ளவும் வருகிறார்கள் என்பதே பொருத்தமாக இருக்கும்"

என்று தஞ்சை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியில் 2-9-'86 அன்று நிகழ்ந்த தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறைக் கள ஆய்வின் நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் திரு இர. ஆலால சுந்தரம் தலைமையுரையாற்றினார்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையுடன் தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறை ஏற்று நடத்தும் கல்வியில் நாடக முன்னோடித் திட்டத்தின் கீழ் மாதிரி முன் ஆய்வு (A Pilot Study) ஒன்று தஞ்சை



இளைஞர் சீர்திருத்தப் பள்ளி மாணவர்களைக்கொண்டு 1986 பிப்ரவரி முதல் ஜூலை வரை நடத்திப் பார்க்கப் பட்டது. இதில் பயிற்சிபெற்ற அப்பள்ளியின் மாணவர்களே படைத்த சிறுநாடகம் ஒன்று ஒளி-ஒலிப் படமாகவும் ஆவணமாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் இயக்குநர் பேரா. சே. இராமானுசம் வரவேற்புரை கூறித் திட்டத்தைத் தெளிவுபடுத்தினார். இப்பள்ளியின் தலைமைக் கண்காணிப்பாளர் திரு அ. நடராசன் சிறப்புரையாற்ற, இந்து நாளிதழின் தஞ்சை நிருபர் திரு கணபதி கருத்துரை வழங்கினார்.

விழாவின் தொடக்கத்தில் இம்மாணவர்களின் படைப்பாக்கத்திறனால் உருவான சிறுநாடகத்தின் ஒளி-ஒலிப் படமும் முடிவில் நாட்டுப்புறக்கலைகளின் ஒளி-ஒலிப் படமும் பதிவு ஒளிக் காட்சியாக மாணவர்களுக்குக் காட்டப் பட்டன. இத்திட்ட ஆய்வாளர் திரு ந.ம.வீ.இரவி நன்றி நவின்றார்.

## தமிழில் மொழியியல் கலைச்சொற்களை உருவாக்கலும் தரப்படுத்தலும்: பணிப்பட்டறை

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறை, ஆகட்டு 16 முதல் 20 வரை பல்கலைக் கழக நல்கைக் குழுவின் பொருளுதவியுடன் "தமிழில் மொழியியல் கலைச் சொற்களை உருவாக்கலும் தரப்படுத்தலும்" என்னும் பொருளில் பணிப்பட்டறை ஒன்றை நடத்தியது. அண்ணாமலை நகர், உதகை, கோயம்புத்தூர், சென்னை, திருவனந்தபுரம், தஞ்சாவூர், மதுரை, மைசூர் ஆகிய இடங்களிலிருந்து இருபத்து நான்கு மொழியியல் அறிஞர்கள் ஒன்று கூடி ஐந்து நாள்கள் தமிழில் மொழியியல் கலைச் சொற்களை உருவாக்குகின்ற பணியிலும் தரப்படுத்துகின்ற பணியிலும் ஈடுபட்டனர். ஐந்து குழுக்களாகப் பிரிந்து இப்பணியில் ஈடுபட்டனர். ஒவ்வொரு நாள் மாலையும் ஐந்து குழுக்களும் ஒன்றாகக் கூடித் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டனர்.

துறையினரால் 5000 சொற்களுக்கு மேல் தொகுக்கப் பட்ட நூலின் படி ஒன்று கலந்துகொண்ட மொழியியல் அறிஞர்களுக்கு முன்பே அனுப்பிவைக்கப்பட்டது. தரப்படுத்தல் மேற்கொள்ள வேண்டிய மொழிக்கொள்கை பற்றிய குறிப்பொன்றும் அனுப்பப்பட்டது. கலந்துகொண்ட மொழியியல் அறிஞர்கள் அனைவரும் இத்தகைய பணி தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டியது என்றும் இப்பணி நூல்வடிவில் விரைவில் வந்தால்தான் பயனளிக்கும் என்றும் மற்றைய திராவிட மொழிகளுக்கும் இது 'மாதிரி'யாக அமையலாம் என்றும் குறிப்பிட்டார்கள்.

– கி. அரங்கன்,
பணிப்பட்டறை இயக்குநர்.

## செருமானியப் பெண்ணின் தமிழ்ப் பாக்கள்

செல்வி உல்ரிக் நிக்கோலஸ், எம்.ஏ., செருமானிய நாட்டைச் சேர்ந்தவர். தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத்துறையில் யாப்பு பயின்றவர். அவர் பாடிய சில பாக்கள்:

1. குறள்வெண்பா:

தமிழின்பம்

இன்றமி ழின்னிசையி னின்பந்தா னின்றி
இனிமை யினிமேலு மின்று.

2. ஆசிரியப்பா:

வயல்வளம்


தஞ்சை சுற்றிய மருத நாட்டிலே
நெஞ்சு மகிழக் கண்கள் குளிரக்
காற்றால் கலங்கிய கழனிகள்
பசுங்கடல் போலப் பரந்திருக் கின்றன.

– சோ. ந. கந்தசாமி,
இலக்கியத்துறை.

## ''கணிப்பொறி ஒருங்கும் பேஸிக் மொழியும்''

## நான்குவாரச் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா

தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையம் ஆகட்டு முதல்நாளிலிருந்து நான்கு வாரங்கள் நடத்திய 'கணிப் பொறி ஒருங்கும் பேஸிக்மொழியும்' என்ற பயிற்சி வகுப்பின் நிறைவு விழா 28-8-'86 அன்று மாலை 3 மணியளவில் கருத்தரங்க அறையில் நடந்தது. விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர.ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். தலைமையுரையில் "கணிப் பொறியில் முழுநேரச் சான்றிதழ்ப்பயிற்சி வகுப்பு நடத்து வது தமிழ்நாட்டிலேயே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று தான்" என்று கூறினார்.



இவ்விழாவில் நிறைவுரையாற்றிய காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் டி.ஆர்.நடேசன் அவர்கள் கணிப்பொறியின் பரந்த பயன் பற்றியும், அதனைப் பயன்படுத்தும்பொழுது செய்திகளை உள்ளீடு செய்தல், ஆய்தல் ஆகியவற்றில் பயன்படுத்துநர் எடுத்துக்கொள்ள வேண்டிய கவனம் பற்றியும் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிப் பேசினார்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட 29மாணாக்கர் களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். இவர்களில் 20 மாணாக்கர் முதல்வகுப்பிலும் 9 மாணாக்கர் இரண்டாம் வகுப்பிலும் தேறியுள்ளனர். அறிவியல் புலத்தலைவர் முனைவர் ஜ.சாதீக் அவர்கள் தமது சிறப்புரையில் கணிப்பொறி இந்த அறிவியல் யுகத்திற்குக் கிடைத்துள்ள பரிசு எனவும் அதனைப் பல துறைகளுக்குப் பயன்படுத்த இவை போன்ற பயிற்சி வகுப்புகள் உதவுமெனவும் தெரிவித்தார். முன்ன தாக விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசிய கணிப்புமையப் பேராசிரியர் திரு கா.செ. செல்லமுத்து அவர்கள் பல்கலைக் கழகத்தில் பயிற்சி வகுப்பு நடத்து வதன் நோக்கம் பற்றியும் பயிற்சி வகுப்பின் அமைப்புப் பற்றியும் எடுத்துக்கூறினார்.

-கணிப்புமையம்.

## நுண்கணிப் பொறிகள் — கருத்தரங்கு

நூலகத் தகவல் பணிகளுக்கு நுண்கணிப்பொறிகள் என்ற தலைப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி சேகரிப்பு, நூலகக் கண்காணிப்பு இயக்ககத்தின் சார்பில், பல்கலைக் கழக நல்கைக்குழுவின் ஆதரவில், ஒரு கருத்தரங்கு 23, 24 ஆகட்டு '86 நாள்களில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர. ஆலாலசுந்தரம் அவர்கள் துவங்கிவைக்க மைய அரசின் பதிப்பத்துறையைச் சேர்ந்த திரு சு.அருணாசலம் அவர்கள் சிறப்புரை ஆற்றினர்.

கருத்தரங்கின் நான்கு அமர்வுகளுக்கும் முறையே திரு டி.எசு.இராசகோபாலன், திரு எசு.சி.பிஸ்வாஸ், திரு பி.கங்காதரராவ், திரு கா.செ.செல்லமுத்து ஆகி யோர் தலைமையேற்றனர். படிக்கப்பட்ட 15 கட்டு ரைகள் விவாதிக்கப்பட்டன.

இந்தியாவில் உருவாக்கப்படும் நுண்கணிப்பொறிகளை இந்திய நூலகத்தகவல் பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்றும், இளநிலை, இடைநிலை, வளர்நிலையில் உள்ள நூலகங்கள் ஒவ்வொன்றுக்கும் எத்தகைய கணிப்பொறி ஒருங்கு தேவை என்றும், செய்திக்கூறுகளை உள்ளீடு செய் வதில் இந்திய நாட்டளவில் ஒரு தரவிதிப்பு தேவை என்றும் கருத்தரங்கின் தீர்மானங்கள் வலியுறுத்தின.

-த.பத்மநாபன்,
கருத்தரங்கு இயக்குநர்.

## 'மதங்கியார்'

கலம்பக நூல்கள்ல் 'மதங்கியார்' என்ற பெண் பாலார் ஒருவர் அவர் ஆடல் பாடல் வல்ல பெண்ணாகக் குறிக்கப்பட்டுள்ளார்.

"இசைபெற அரங்கின் ...மதங்கியார்"-திருவருணைக் கலம்பகம்

"மதங்கியரை ஒத்த மயில்"-கம்பராமாயணம்



என்பன இலக்கியங்களில் காணும் பகுதிகளாகும். பிங்கல நிகண்டு 'மதங்கியார் — பாண்மகள்' என்று பொருள் கூறும்.

இவ்விலக்கியங்களுக்கெல்லாம் இலக்கணம் போன்று அமைந் துள்ள 'மதங்கியார்' சிலை 1803-ஆம் ஆண்டு இரண் டாம் சரபோசி மன்னரால் தஞ்சை நகரம் எல்லையம்மன் கோயிலில் எழுந்தருளுவிக்கப் பட்டுள்ளது. யாழ் மீட்டும் நிலையில் இசையில் மெய் மறந்து வீற்றிருக்கும் கோலத்தில் கலை வடிவுக்கொரு சிலையாக வடிக்கப்பட்டுள்ளது.

கலைமகள் விழாவன்று மட்டும் சிறப்புப் பூசை நடை பெறுவது மேற்கண்ட கருத்தை வலியுறுத்தும்.

-செ.இராசு, கல்வெட்டியல் துறை.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X;

இ.அ.அ. மட்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 00.
தமிழ்நாடு - இந்தியா

) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

### அகத்திய விண்மீன்

நாம் பார்க்கக்கூடிய அதிக ஒளியுடைய விண்மீன்களில் அகத்திய விண்மீன் (Canopus) இரண்டாவதாகும். இதைவிட மிகவும் அதிக ஒளியுடையது மிருகசீரிடம் (Sirius) ஒன்றே. அகத்திய விண்மீன் வெண்மஞ்சள் நிறமுடையது; கதிரவனின் ஒளியைப்போல் 1500 மடங்கு அதிக ஒளியுடையது; இது புவியிலிருந்து 100 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது.

— அறிவியல் களஞ்சியம்
முதல் தொகுதி -. பக்.39
தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு.

### வாயைச் சுற்றிப் பச்சை குத்துதல்

அயினு சப்பானின் பழங்குடிகள். இன்றும் ஏறக்குறைய 20 ஆயிரம் அயினு (Ainu) மக்கள் வாழ்கிறார்கள். பெரும்பாலோர் ஒகைடோ தீவில் வசிக்கின்றனர். ஒகைடோ சப்பானின் வடகோடியில் இருக்கும் பெரும் தீவாகும்.

இவ்வினப் பெண்களுக்கு வாயைச்சுற்றிப் பரந்த அளவில் பச்சை குத்துதல் வழக்கமாக உள்ளது.

— வாழ்வியற் களஞ்சியம்
முதல் தொகுதி – பக்.559
தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு.

## புதிய வெளியீடுகள்

### அகத்தியர் குழம்பு

பதிப்பாசிரியர்கள்: டாக்டர். சே. பிரேமா
புலவர் ப. வெ. நாகராசன்

சித்த மருத்துவத்தில் மிகப் புகழ்பெற்றது அகத்தியர் குழம்பு. இதனை விளக்க முதன்முதலாக வெளிவந்துள்ள தனிச்சுவடிநூல் இது. செய்முறை, தீரும் நோய்கள், முதலியவற்றைத் தெளிவாக விளக்குவதால் சித்த மருத்துவர்கள், மருத்துவ ஆய்வாளர்கள், மருத்துவ மாணவர்களுக்குப் பெரிதும் துணையாகும்.

நூல் அளவு திம்மி 1/8 பக்.114 விலை: உரு.40/

### இந்துத் திருமணச் சட்டம்

ஆசிரியர்: புலமை வேங்கடாசலம்

தமிழில் நீதிமன்ற நடைமுறைகளை விளக்கும் நூல்கள் இல்லை என்ற பெருங்குறையைக் களையத் தோன்றியது இந்நூல். ஆங்கிலச் சட்ட விளக்க நூல்களை ஒத்த அமைப்புகளைக் கொண்டது. குறிப்பாக இந்துத் திருமண முறைகளில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கச் சட்டங்கள் மூலம் வழிகாட்டுவது.

நூல் அளவு திம்மி 1/8 பக்.149 விலை. உரு.48/

## வெளிவரும் பதிப்புகள்

1. **பொது அறுவை மருத்துவம்**
   டாக்டர் சு. நரேந்திரன்
2. **பெரிய புராணச் சிறப்புப் பெயர் அகராதி — 'ஊர்ப் பெயர்கள்'**
   -முனைவர் தா. வே. வீராசாமி
3. **தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு**
   -பேரா. கே. எம். வேங்கடராமையா
4. **தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள்**
   -புலவர் செ. இராசு

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.